DEPOSITION OF WITNESS

In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,

CC. No. 28 of 2025

Prosecution witness: LW- 1/ PW-1

| | |
|---|---|
| Name | மல்லிகா |
| Fathers / Husband name | முனிராமன் |
| Village | சத்தியவேடு |
| Age | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.04.2026.

முதன்மை விசாரனை நேரம் - 04.50

1. நான் கூலி வேலை செய்து வருகின்றேன். தொம்பரம்பேட்டில் உள்ள பேடு என் மகள் ஜெயந்தி என்னிடம் தன் வீட்டில் செடி அதிகமாக இருப்பதால் பாம்பு அடிக்கடி வருவதாகவும், அதை துப்புறவு செய்வற்காக என்னை அவர் வீட்டிற்கு வர சொன்னார். தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை சுமார் 2 வருடத்திற்கு முன்பு நான் அவர் வீட்டிற்கு சென்று செடிகளை பிடிங்கி கொண்டு இருந்தேன்.

2. என் மகளின் வீட்டிற்கு அருகே குடியிருக்கும் ஆஜர் எதிரிகளின் வீட்டில் வளர்ந்து இருந்த புளியமரத்தின் கிளைகள் என் மகள் வீட்டின் மீது சாய்ந்து இருந்தது. நான் அதை வெட்டி விடுமாறு செல்லமாளிடம் கூறினேன். அதற்கு செல்லம்மாள்" ஊரை விட்டு வந்த தேவிடியாவிற்கு இங்கு என்ன வேலை என்று கேட்டு வெட்ட முடியாது என்று கூறினார்.

3. நான் பாம்பு வருவதால் தான் வெட்ட சொல்லிக் கேட்கிறேன் என்ற கேட்டபோது, அவர் என்னை தகாத வார்தையால் பேசி ஈசன் கத்தியால் என் தலையில் அடித்தார்.இதனால் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. ஆஜரில் உள்ள இரண்டாம் எதிரி என்னை தகாத வார்த்தையால் பேசினார்.

4. என் மகளும், மருமகனும் என்னை அருகில் இருந்த அரசு மருத்துவமனயில் சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

5. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது.இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதெனும கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன்.

6. மேற்படி புகாரை நீங்கள் காவல் நிலையத்திற்கு சென்று கொடுத்தீர்களா என்றால் என்னுடைய மகன் மற்றும் மருமகள் சென்று கொடுத்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டு இருந்தேன்.

7. புகாரினை நான் நேரில் சென்று காவல் நிலையத்தில் கொடுக்கததால் அதில் உள்ள விவரங்கள் தெரியாது. நான் என் தலையில் அடிப்பட்டு இரத்ததுடன் காவல் நிலையத்திற்கு சென்றேன் அவர்கள் தான் என்னை மருத்துவமனக்கு சென்றேன் அதனால் தான் மகனும், மருமகளும் புகார் கொடுத்தார்கள்.

8. உங்களுக்கு புகார் கொடுக்கப்பட்ட தேதியும் நேரமும் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு அடிப்பட்ட நேரம் காலை 9.30மணி. மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் விசாரணைசெய்து கையொழுத்து வாங்கினர்களா என்றால் வாங்கினார்கள்.

9. எத்தனை கையொழுத்து வாங்கினார்கள் என்றர் 3 முதல் 4 கையொழுத்து வாங்கினார்கள். நான் கையொப்பம் செய்த தாள் எழுப்படாத வெள்ளை தாளாக இருந்ததா என்றால் இல்லை. அந்த தாளில் எழுதி இருந்தது. எனக்கு படிக்க எழுத தெரியாது அதில் உள்ள விவரத்தை என்னிடம் கூறினார்கள் நான் கையொழுத்து போட்டேன்.

10. எந்த மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள் ஏனறால் திருவள்ளுர் அரசு மருத்துவனையில் வைத்து விசாரணைசெய்தார்கள். எந்த அதிகாரி வந்து விசாரணை செய்தார்ள் என்றால் எனக்கு அவர் காவல் துறையினர் என்று மட்டும் தான் தெரியும்.

11. நீங்கள் சம்பவம் இடத்தில் இருந்து மருத்துவனைக்கு எதில் சென்றீர்கள் என்றால் ஆம்புலன்ஸ் மூலம் சென்றேன். எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் பகல் 12 மணிக்கு சென்றேன். என்னுடன் என்னுடைய கணவர் மற்றும் மகன் வந்தார்கள்.

12. சம்பவம் நடந்த இடத்தில் சுமார் 8 வீடுகள் உள்ளது. பொதுமக்கள் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 10 முதல் 15 நபர்கள் இருந்தார்கள்.

13. என்னுடைய சொந்த ஊர் ஆந்திரா மாநிலம் சத்தியவேடு என்றால் சரிதான். எதிரிகள் உங்கள் மீதும், உங்களுடைய மகள், மருமகள், மகன் ஆகியோர் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து, CC 31-2024 ஊத்துக்கோட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

14. உங்களுடைய வாக்குமூலத்தில் எதிரி செல்லம்மாள் என்பவர் தான் என்னை அசிங்கமாக பேசி அடித்தார் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய மகள் வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் நிலம் சம்பந்தமாக

பிரச்சனை இருக்கிறது அதனால் தான் நீங்கள் அங்கிருந்து வந்து சண்டை போட்டீர்கள் என்றால் சரியல்ல.

15. நீங்கள் கொடுத்த புகாரில் சம்பவம் காலையில் நடந்ததா அல்லது இரவு நடந்தா என்று குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. ஆனால் சம்பவம் காலையில் தான் நடந்தது. நான் காலையில் தான் செடிகளை பிடுங்குவதற்காக சென்றேன்.

16 நீங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக எத்தனை நாட்கள் இருந்தீர்கள் என்றால் சுமார் 4 நாட்கள் இருந்தேன். நீங்கள் இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகின்றீர்கள் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 5.25